**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.120/2011**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **21.11.2025** |
| **பெயர்** | **நேதாஜி** |
| **த/பெ** | **காசியப்பநாடார்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்–11.41. எ.எம்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னுடைய ஷேர் சர்டிபிகேட் 2ம் பிரதிவாதியிடம் கொடுக்கப்பட்டது. அதனால் அந்த தொகை வாதிக்கு உரிமை என தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் என்ன பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கடனை அடைத்த பிறகும் என்னுடைய ஷேர் சர்டிபிகேட் சங்கத்தில் இருந்து திருப்பி கொடுக்கவில்லை அதனை கோரி தான் தாவா தாக்கல் செய்துள்ளேன்.

2. என்னுடைய பங்கினை (ஷேர்ஸ்) எனக்கு தெரியாமலேயே 3–ம் நபருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு மாற்றம் செய்ய வேண்டுமானால் யாரின் பெயரில் உள்ளதோ அவரும் அந்த பங்கினை பெறுபவரும் கையொப்பம் இட்டிருக்க வேண்டும் என்றும் அப்படி இருக்கையில் நானும் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கையொப்பம் (Specimen signature) ஒத்துப்போகாமல் இருந்ததால் வங்கி அதனை திருப்பிவிட்டார்கள் என்றால் சரிதான்.

3. அவ்வாறு பங்கு மாற்றத்தை நான் நிறுத்தி வைக்க வங்கியிடம் ஆட்சேபணை தெரிவித்ததற்கு வங்கி நீதிமன்றத்தின் மூலம் ஆட்சேபணை செய்யுமாறு கூறியது. நீதிமன்றத்தினை அனுகி தான் உத்தரவு பெற வேண்டும் என்று வங்கியிடம் இருந்து எழுத்துமூலமாக தெரிவிக்கப்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் இருந்து யாருக்கு பங்குகளை மாற்றம் செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறபிக்கும் பட்சத்தில் 1–ம் பிரதிவாதி அந்த உத்தரவிற்கு கட்டுப்பட தயாராக உள்ளார்

**விசாரணை முடியும் நேரம். 11.52. எ.எம்.**